

கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில், திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகளை வழங்கும் விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், நகர செயலாளர் பூக்கடை கணேசன், பொதுக்குழு உறுப்பினர் பக்தவச்சலு, ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், ஒன்றிய நிர்வாகிகள் கிருஷ்ணமூர்த்தி, மோகன்ராஜ், மோகன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கா.அமுதா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நிர்மல் ராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மேற்கு மாவட்ட அலுவலகம் கலைஞர் அரங்கத்தில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன்,கே.கே.சி. பிரபாகரன்,மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாவட்ட துணை செயலாளர்கள் மைக்கேல்,தமயந்தி, தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர். இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

## நெல்லை மாநகராட்சியின் 2026-2027 ஆம் ஆண்டிற்கான

# விளைபயன் வரவு - செலவுதிட்ட அறிக்கை கூட்டம்!

## மேயர் கோ. ராமகிருஷ்ணன் தலைமை!

நெல்லை, மார்ச் 5-

நெல்லை மாநகராட்சி மைய அலுவலக இராஜாஜி மண்டபத்தில் 2026-2027 ம் ஆண்டிற்கான விளைபயன் வரவு செலவு திட்ட அறிக்கை கூட்டம் மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் தலைமையில் ஆணையாளர் மரு. மோனிகா ராணா, துணை மேயர் கே.ஆர்.ராஜு, வரிவிதிப்பு குழு தலைவர் சுதா மற்றும் வரிவிதிப்பு குழு உறுப்பினர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

முன்னதாக மேயர் கோ.ராமகிருஷ்ணன் சைக்கிளில் வந்து பட்ஜெட்டை தாக்கல் செய்தார்.

பின்னர் மேயர் ராமகிருஷ்ணன் பேசியதாவது.

தமிழக மக்களுக்கு கலைஞரின் உரிமைத் தொகை கோடை கால சிறப்பு நிதி ரூபாய் 5000,ம் முன் கூட்டியே அவர்களது வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டதற்கும், மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டத்தின் அமல்படுத்திய முதலமைச்சர் அவர்களுக்கு இம்மாமன்றத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நெல்லை மாநகராட்சிக்கு வருமானமாக 404.75 கோடி ரூபாயாக இருக்கும் நிலையில் 402.35 கோடி ரூபாய் செலவாகும் என்ற நிலையில் ரூபாய் 2 கோடி 40 லட்சம் உபரி நிதியாக உள்ளது. தாமிரபரணி நதியை பாதுகாக்க ரூ.59.05 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தவும் புதிய திட்டம் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நெல்லை மாநகராட்சி மக்களின் வாழ்வியல் மாற்றத்தை மேம்படுத்தும் வகையில் சிறப்பு திட்டப் பணிகள் மற்றும் புதிய பணிகளை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதன்படி மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதி ரூ.10 லட்சத்தில் இருந்து ரூ.25 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.மண்டலத்திற்கு 1 வீதம் மொத்தம் 4 நவீன உடற்பயிற்சி கூடங்கள் பொதுமக்களுக்காக அமைக்கப்படும். தெருக்களில் சுற்றி தெரியும் தெரு நாய்களை தொண்டு நிறுவனம் மூலமாக பாதுகாத்திட ராமையன்பட்டி அருகில் 10 ஏக்கர் இடத்தில் நவீன கூரை அமைக்கப்பட உள்ளது.மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பழைய பேட்டை பகுதியிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அடுக்கு மாடி குடியிருப்பு கட்டிடம் கட்டிக்கொடுக்கப்படும்.தாமிரபரணி நதி மாசுபடுவதில் இருந்து தடுக்கும் விதமாக ஜெர்மன் வங்கி மேம்பாட்டு நிதி உதவியுடன் தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.59.05 கோடி மதிப்பீட்டில் நதி முகப்பு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். ரூ.102.32 கோடி மதிப்பில் ராமையன்பட்டி உரக்கிடங்கு வளாகத்தில் பாதாள சாக்கடை திட்ட கழிவு நீரை சுத்திகரிக்க கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும். ரூ.42.15 கோடி மதிப்பில் மணப்படை வீடு குடிநீர் தலைமை நீரேற்று நிலையத்தில் புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.முறப்பநாடு குடிநீர் திட்ட விரிவாக்க பணிக்காக ரூ.91.91 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் ரூ.12.50 கோடி மதிப்பில் நவீன வசதிகளுடன் புதிய அலுவலக கட்டிடம் மற்றும் மாமன்ற கூட்ட அரங்கு அமைக்கப்படும்.ராமையன்பட்டி உரக்கிடங்கு வளாகத்தில் உள்ள மறு சீரமைப்பு மரபு கழிவுகளை அகற்றும் பணி ரூ.5.10 கோடியில் மேற்கொள்ளப்படும். மாநகராட்சி குடிநீர் கட்டமைப்பு களை டிஜிட்டல் மயமாக்க ஏற்பாடு நடந்து வருகிறது.மாநகராட்சி முழுவதும் வாரத்தின் 7 நாட்களும் 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் திட்டம் தீவிர படுத்தப்படும்.மாநகராட்சி திடக்கழிவு களில் இருந்து கழிவு நீரேற்று நிலையங்கள், கழிவுநீர் உந்துநிலையங் கள்,எந்திர குழிகள் ஆகியவற்றில் சேகரமாகியுள்ள நாள்பட்ட கழிவுகளை ரோபோடிக் எந்திரம் மூலம் அகற்றுவதற்கு 2 ரோபோடிக் எந்திரங்கள் கொள்முதல் செய்யப்படும்.

டவுன் நயினார் குளத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் படகு சவாரி செய்ய பணிகள் மேற்கொள்ளப்படும்.நெல்லை மாநகராட்சியில் மொத்தம் 45 பள்ளிகள் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.4 மண்டல பகுதிகளிலும் மண்டலத்திற்கு ஒரு பள்ளி என தேர்வு செய்து அந்த பள்ளியை மாதிரி மாநகராட்சி பள்ளியாக உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பது உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து தெரிவித்தார்.

கடந்தாண்டு 5 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு மாநகராட்சியில் 2 கோடி 40 லட்சம் ரூபாய் உபரி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.முதலமைச்சர் அவர்களின் பொன்மொழி வார்த்தையான எல்லோர்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில் திட்டங்கள் செயல்படுத்தும் வகையில் மாநகராட்சியின் நிதி வருவாய் உயர்ந்துள்ளது.இதுவே வளர்ச்சியாகும் என்று கூறினார்.

நிகழ்வில் மண்டலத் தலைவர்கள் பிரான்சிஸ் (பாளை) மகேஸ்வரி (நெல்லை) கதிஜா இக்லாம் பாசிலா (மேலபாளையம்) ரேவதி (தச்சை) மாமன்ற உறுப்பினர்கள், மற்றும் கண்காணிப்பு பொறியாளர் கண்ணன், மாநகராட்சி உதவி ஆணையர்கள், அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா - அறுசுவை உணவு!

## எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., டி.காமராஜ் எம்.சி, எஸ்.சேகர் எம்.சி., வழங்கினர்! நிகழ்ச்சி ஏற்பாடு: பி.புகழேந்தி எம்.சி.!

காஞ்சிபுரம், மார்ச் 5-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, பெருங்களத்தூர் தெற்கு பகுதி 55வது வார்டு தமிழ்நாடு சார்பில் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா காஞ்சிபுரம் வடக்குமாவட்ட செயலாளர் சிறு,குறு தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆணைக்கிணங்க தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, அவர்களின் வழிகாட்டுதலின்படி தாம்பரம் 4வது மண்டலக்குழு தலைவர் டி.காமராஜ் முன்னிலையில் தெற்கு பகுதி துணை செயலாளர் பி.புகழேந்தி எம்.சி., ஏற்பாட்டில் முடிச்சூர் சாலை, காமராஜர் சாலை, முத்துமாரியம்மன் கோவில்தெரு, அம்பேக்கர் சிலை, அன்னை அஞ்சுகம் நகர், ஆகிய இடங்களுக்கு தலா 1000 நபர்களுக்கு 01.03.2026, ஞாயிற்றுக்கிழமை அன்று அறுசுவை பிரியாணி தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர், எம்.சி, வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் டி.கே. கோட்டி, சுந்தர், இளைஞரணியை சார்ந்த ரைமன், கேசவன், ராகுல், அன்சாரி, பி.சுரேஷ், வட்டச்செயலாளர் எஸ்.சுரேஷ், என். ராஜன், பொற்செல்வி ஆறுமுகம், குமரன், இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ். கணேசன், முனியப்பன், நாகப்பன், சந்தானம், பரத், பாபு, பாலா, முருகவேல், எஸ்.குணசேகரன், துணைச்செயலாளர் குமரவேல், அருள்ராஜ், குப்புசாமி, சந்திரசேகர், கோவிந்தராஜ், நடராஜ், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி மற்றும் கழக முன்னோடிகளும், ஊர்பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாடு: பெருங்களத்தூர் தெற்குபகுதி துணைச்செயலாளர் 55வது வார்டு உறுப்பினர் பி.புகழேந்தி எம்.சி.



திராவிட முன்னேற்றகழகத்தலைவரும், தமிழ்நாட்டின்முதலமைச்சர் திராவிடமாடல் நாயகன்,உலக நாடுகளுக்கெல்லாம் வழிகாட்டியாகவிளங்கும் தளபதி முத்துவேல்கருணாநிதி ஸ்டாலின் அவர்களின்73வது பிறந்த நாள் விழா.டியுசிஎஸ் திராவிட தொ.மு.ச. சார்பில்02.03.2026திங்கட்கிழமைநண்பகல்01.00மணியளவில்திருவல்லிக்கேணி டியுசிஎஸ் தலைமை அலுவலகத்தில் தொ.மு.ச.பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் அவர்களின் அறிவுரைப்படி தொ.மு.ச.பேரவைத்தலைவர் கி.நடராசன்,பொருளாளர்கோசி. வள்ளுவன்ஆகியோர் அனைத்து தொழிலாளர்களுக்கும் அறுசுவைஉணவும்,வெளிக்கொணர்வு பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி சிறப்பித்தார்கள்.இந்நிகழ்ச்சியில் தொ.மு.ச. பேரவைத் துணைத்தலைவர் இரா.பொன்னுராம்,பேரவை செயலாளர் சு.பத்மநாபன் அவர்களும் கலந்துகொண்டார்கள்.நிகழ்ச்சி ஏற்பாடுகளை டியுசிஎஸ். திராவிடதொ.மு.ச பொதுச்செயலாளர் இராஜன்சாமிநாதன் மற்றும் நிர்வாகிகள்சிறப்பாக செய்திருந்தார்கள்.

## நெல்லை மாவட்டத்திற்கு வருகை தரும் துணை முதல்வர்

# உதயநிதி ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு அளித்திடுவோம்!

## நெல்லை மேற்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! இரா.ஆவுடையப்பன் தலைமை!



நெல்லை, மார்ச் 6-

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நெல்லை மேற்கு மாவட்ட அலுவலகம், டாக்டர்.கலைஞர் அரங்கத்தில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்ஆ.பிரபாகரன், கே.கே.சி.பிரபாகரன், மாநில தொண்டர் அணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம் மாவட்ட துணை செயலாளர்கள் மா.மைக்கேல், ப.தமயந்தி,கு.தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் இராமச்சந்திரன், அபூபக்கர்,கதிர்வேல் முருகன்,

ரவிச்சந்திரன்.ஒன்றிய செயலாளர் கள்,பொறுப்பாளர்கள் பா.ஜெகன், முத்துபாண்டி (எ) பிரபு, முத்துகிருஷ்ணன், மு.செல்லத்துரை, சமுத்திரபாண்டியன், சிவக்குமார், குமார், ஜெயக்குமார், மகேஷ் மாயவன், சிவன் பாண்டியன், பொன் செல்வன்,நகர செயலாளர்

கி.கணேசன் பேரூர் செயலாளர்கள் நெல்சன், அழகேசன், லஷ்சுமணன், ஜெகதீசன்,முத்துகணேசன், சுப்பையா, மணிஷா செல்வராஜ், சிந்தா மதார்,மணிகண்டன், டி.வானுவாமலை, மாவட்ட அணி அமைப்பாளர்கள்,மகளிர் அணி திவ்யா மணிகண்டன், மகளிர் தொண்டர் அணி சங்கீதா சுதாகர், வழக்கறிஞர் அணி ஜெ.செல்வசூடாமணி,கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி சு.க.நெடுஞ்செழியன், தகவல் தொழில்நுட்ப அணி பிரேம் ஆனந்த், அயலக அணி பீர்முகம்மது மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வேல் முருகன், ஆகாஷ், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் அருந்தவசு பாண்டியன் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் நயினார், விஜய்,மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் மணிகண்டன் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பெண்களுக்குக் கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கியது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதோடு, சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழ்ந்து,அரசின் மாத ஓய்வூதியத் உதவித்தொகை பெற்று வரும் முதியோர், கைம்பெண்கள், வயது முதிர்ந்த திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கும் இத்தகைய சிறப்பு நிதியை வழங்கிட வேண்டும் எனக் கோரிக்கைகள் வந்தன.

கோரிக்கை வைத்தால் அந்த கோரிக்கை நிறைவேற்றி தருபவர் தலைவர் நம் முதலமைச்சர் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் வைத்த கோரிக்கையை இன்று நிறைவேற்றி யுள்ளார்கள்! நலிவு நிலை போக்கும் சிறப்பு நிதியாக 2000 ரூபாயை மார்ச் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வங்கிக் கணக்கில் வரவு இன்ப அதிர்ச்சியாக இன்று காலையிலேயே வரவு வைக்கப்பட்டது.இதன்படி, பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் பயன் பெற்று வரும் முதியோர், கைம்பெண்கள் என, மொத்தம் 29 இலட்சத்து 29 ஆயிரம் பயனாளி களுக்கு தலா 3200 ரூபாயும்,5 இலட்சத்து 92 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளுக்கு தலா 3500 ரூபாயும், பராமரிப்பு உதவித் தொகை பெற்றுவரும் 2 இலட்சத்து 58 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்களுக்கு, தலா 4000 ரூபாயும் இன்று காலை வழங்கி உள்ளார்கள். திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியும் பாராட்டும் வாழ்த்துக்களும் தெரிவித்துக் கொள்வது.

மீனவர் குடும்பங்களுக்கு ஏப்ரல் முதல் ஜூன் வரையான காலத்திற்கான மீன்பிடித் தடை கால உதவித்தொகையாக, குடும்பம் ஒன்றுக்கு ரூ.8000 வீதம் மொத்தம் 1,62,900 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விட மாட்டோம்! வெல்வோம் ஒன்றாக! என சூளுரைத்து, நாளும் பொழுதும் உழைத்துக் கொண்டிருக்கும் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத்தலைவர் அன்புத்தளபதியார் அவர்களுக்கு இக்கூட்டம் வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் தெரிவித்துக் கொள்கிறது.

கழகத்தலைவர் அவர்கள் அறிவித்தபடி மார்ச் 9ல் திருச்சியில் 10 லட்சம் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளும் மாபெரும் நிர்வாகிகள் சந்திப்பு மாநாட்டிற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாநாட்டில் அனைத்து தலைமை கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர், வார்டு,கிளைக் கழக செயலாளர்கள்,நிர்வாகிகள் கலந்து கொள்ள வேண்டும் என்றும்.

அதே போல,அனைத்து சார்பு அணிகளின் மாநில, மாவட்ட, மாநகர,ஒன்றிய, நகர,பேரூர் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள் கலந்து கொள்ள வேண்டும். ஒரு கழக நிர்வாகியும் விடுபடாமல் மாநாட்டில் கலந்து கொள்வதையும்,கழகத்தலைவர் உரையை முடிக்கும் வரையில் இராணுவக் கட்டுப்பாட்டுடன் இருப்பதற்கும் வழிகாட்டி, மாநாட்டு திடலுக்கு உரிய நேரத்திற்கு வந்துவிடுவதையும் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் உறுதி செய்திட வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**ஸ்டாலின் தொடரட்டும்!**

**தமிழ்நாடு வெல்லட்டும்!**

முதலமைச்சர் கழகத்தலைவர் அன்புத்தளபதியார் அவர்களுடைய பிறந்த நாளையொட்டி நெல்லை மேற்கு மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர்,கிளை, வார்டு பகுதிகளில் கழகக்கொடியேற்றி இனிப்புகள் வழங்கி, ஏழை, எளிய பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களுக்கு கழகத்தின் சார்பில் நிர்வாகிகள் நலத்திட்ட உதவிகள் வழங்கியும்,மாணவர்கள் இளைஞர்கள் முதியோர்கள், பெண்கள் உள்ளிட்ட அனைவரும் பயன்படுகின்ற வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கியும், மிகச் சிறப்பாக எழுச்சியுடன் நிகழ்ச்சிகளை நடத்தி கொண்டிருக்கின்ற ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு, சார்பு அணி நிர்வாகிகளுக்கு இக்கூட்டம் மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும்,நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

**வெல்வோம் இருநூறு!**

**படைப்போம் வரலாறு!**

முதலமைச்சர் கழகத்தலைவர் அன்புதளபதியார் அவர்களுடைய ஆணைக்கிணங்க “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” என்னும் நிகழ்வின் அடிப்படையில் அம்பாசமுத்திரம், ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியில் மாவட்ட மகளிர் அணியும், மாவட்ட மகளிர் தொண்டர் அணியும் சிறப்பாக செயல்பட்டு வரும் நிலையில் தொடர்ந்து அந்த நிகழ்ச்சியினை நடத்திட இக்கூட்டம் கேட்டு கொள்வதோடு மகளிர் மற்றும் மகளிர் தொண்டர் அணியினருக்கு இக்கூட்டம் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும்,தெரிவித்துக் கொள்கிறது.

2026 தேர்தலில் தலைவரின் வரலாற்று வெற்றி இலக்கினை நோக்கி பயணிக்க இளைஞர் பட்டாளத்தை இராணுவ கட்டுப்பாடோடு வழிநடத்தி செல்லும் துணை முதலமைச்சர்,கழக இளைஞர் அணி செயலாளர் அவர்கள் வருகின்ற 05.03.2026 அன்று திருநெல்வேலி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்கள்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிப்பதோடு அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியில் அம்பாசமுத்திரம், ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில அணி நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை,வார்டு, கழக செயலாளர்கள்,நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்,

துணை அமைப்பாளர்கள் ஆகியோர்கள் தவறாமல் கலந்து கொள்ள இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**இரங்கல் தீர்மானம்**

எனக்கு ஒரு கண்ணில் சரிவரப் பார்வை இல்லை என்றாலும், அகத்தில் மற்றொரு கண் இருக்கிறது. அதுதான் நல்லகண்ணு” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கண்ணாகப் போற்றப்பட்ட முதுபெரும் தலைவர், நம் சமகாலத்தில் வாழ்ந்த சமரசமற்ற போராளி தோழர் திரு.நல்லகண்ணு அய்யா அவர்கள் மறைவிற்கும்,

வீரவநல்லூர் பேரூர் கழகம் முன்னாள் அவைத்தலைவர்இராமையா தேவர் மறைவிற்கும்,வீரவநல்லூர் பேரூர் கழக முன்னோடி திரு.மாடசாமி அவர்களின் மறைவிற்கும் இக்கூட்டம் ஆழ்த்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.



கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியம், வடக்குத்து ஊராட்சி,மற்றும், பண்ருட்டி வடக்கு ஒன்றியம், சிறுவத்தூர், எலந்தம்பட்டு, திருவாமூர் உள்ளிட்ட பல ஊராட்சிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 73ஆவது பிறந்தநாள் விழா நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் 5,000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும், அன்னதானத்தையும் வழங்கி சிறப்பித்தார். அ.குணசேகரன், ஆர்.சந்தோஷ்குமார், ஒன்றிய அவைத் தலைவர் வீர.ராமச்சந்திரன், பொருளாளர் ஆனந்தஜோதி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தன், மைனர் ராஜசேகர், ஏழுமலை, வி.ஜி.ராமலிங்கம், ஜெகஜீவன்ராம், பக்தவாச்சலம் இராம.வெங்கடேசன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர்.ராஜேஷ், சடையப்பன் சிவந்தான்செட்டி, உள்ளிட்ட திமுக மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.